உ

வவுனியா வெளிவட்ட வீதி

# ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய

## முகபத்திர வட்ட (வேசரம்) சித்திரத்தேர்


## வெள்ளோட்ட விழா மலர்



29.04.2001

55.22
ிந்தா
L IPR

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டம் சிறப்புற வாழ்த்துகின்றோம்.




கட்டிடத் தேவைகளுக்கான அனைத்து பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கு நீங்கள் நாடவேண்டிய ஓர் இடம்.

## லோஜி கிறேசர்

**தவசிகுளம் வீதி**

**மதவுவைச்சகுளம்**

**வவுனியா.**


உரிமையாளர் : க. தில்லைநாயகம்

T.P. : 024-20110

024-23046.

திரு/திருமதி/செல்வி
இராஜமனோகர் புலேந்...
அவர்கள் நன்கொடையாக அ...
திகதி 09.08.20...

உ



வவுனியா வெளிவட்ட வீதி

# ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய
# முகபத்திர வட்ட (வேசரம்) சித்திரத்தேர்

# வெள்ளோட்டவிழா மலர்

மலராசிரியர்

தமிழ்மணி அகளங்கன்

## 29.04.2001

உ

வவுனியா வெளிவட்ட வீதி அருள்மிகு

# ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்



உ

வவுனியா வெளிவட்ட வீதி அருள்மிகு

# ஸ்ரீ சிந்தாமணி விநாயகர்

ஆலய புதிய சித்திரத்தேரின் தோற்றம்



# உள்ளத்தே(ர்) இருந்து...

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமானுக்குச் சகல சிறப்புக்களும், சகல வனப்புக்களும் பொருந்திய சித்திரப் பொற்றேர் அமைக்கப்பட்டதையும், அதன் வெள்ளோட்டப் பெருவிழா விஷு வருடம் சித்திரைத் திங்கள் 16ம் நாளில் (29.04.2001) நிகழ இருப்பதையும் அறிந்து பெருமகிழ்வு கொண்டிருந்த வேளையில் வெள்ளோட்ட விழா மலர் தயாரிக்கும் பொறுப்பு என்னிடம் விடப்பட்டது.

சிந்தாமணி விநாயகப் பெருமானின் சந்நிதியில் பல தொடர் சொற்பொழிவுகளையும் கந்தபுராணபடனங்களையும் நடாத்தத் திருவருள் பாலித்தது போலவே, இப்பணியில் ஈடுபடவும் திருவருள் பாலித்துள்ளது.

தேரின் தூய்மை, அழகு, பிரகாசம், வேலைப்பாடு இவற்றைப் பார்க்கும் போது இத்தேரினை உருவாக்கியவர்களின் தவம் (முயற்சி) எத்தகையது என்பது நன்கு புரியும்.

தேர் சிறப்பாக இருந்தால்தான், தூய்மையாக இருந்தால் தான், அழகாக இருந்தால் தான், ஆண்டவன் அங்கு எழுந்தருளுவான் என்பதைப் புரிந்து கொள்கிறோம். ஆண்டவன் அமரவேண்டிய இடம் அப்படிப்பட்டதுதான் என்பதைப் புரிந்து கொள்கிறோம்.

அப்படிப் புரிந்து கொண்ட நாங்கள், எங்கள் இதயத்தேரில் வந்து குடியிருக்கும்படி இறைவனை இறைஞ்சுகின்றோம். எங்கள் இதயத்தேரில் ஆண்டவன் குடியிருக்க வேண்டுமாயின் அத்தேரை எவ்வளவு தூய்மையாக அழகாகப் பிரகாசம் பொருந்தியதாக வைத்திருக்க வேண்டும் என்பதை உணர்ந்து கொள்வதில்லை.

இதயத்தை இறைவன் எழுந்தருளும் தேராக வைத்திருக்க பக்தி என்னும் பேருழைப்புத் தேவை. புறத்தேரை உருவாக்கிய உழைப்பிலும் அதிக உழைப்பு அகத்தேரை உருவாக்கத் தேவை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

இம்மலருக்கு ஆசிச் செய்திகள் வாழ்த்துச் செய்திகள், கட்டுரைகள் வழங்கிய பெரியோருக்கும், இம்மலரை அமைப்பதில் ஆர்வம் காட்டி ஒத்துழைத்த மலர்க்குழுவினருக்கும் விநாயகப் பெருமானின் பேரருள் கிட்டும்.

அழகிய இச்சித்திரப் பொற்றேரினை அரிய முறையில் அமைத்துதவிய சிற்பக் கலாரத்னம், கி.கலாமோகன் அவர்களுக்கும், அவரின் குழுவினருக்கும், தேர் சிறப்புற அமைய ஒத்துழைத்த அடியார்கள், அன்பர்கள், வள்ளல்கள் ஆலய பரிபாலன சபையினர் யாவருக்கும் சிந்தாமணி விநாயகப் பெருமானின் பேரருள் கிட்டப் பிரார்த்திக்கிறேன்.

வரலாற்று ஆவணமாகத் திகழப் போகும் இம்மலர் சிறக்க உழைத்த அனைவருக்கும் **வன்னி குயிக் அச்சகத்தாருக்கும்** என் மனமார்ந்த நன்றிகள்.

*என்றும் இன்பம் பெருகுக.*

*அன்புடன்*
*அகளங்கன்*

## பரிபாலன சபை உறுப்பினர்கள்

| | | |
|---|---|---|
| தலைவர் | - | திரு. V.S.தேவகுமாரன் |
| செயலாளர் | - | திரு. V.குமாரசிங்கம் |
| பொருளாளர் | - | திரு. S.K.அருந்தவராஜா |
| உப தலைவர் | - | திரு. மு.நடராசா |
| உப தலைவர் | - | திரு. பொ. நல்லையா |
| உப செயலாளர் | - | திரு. S.நாகராசா |

## நிர்வாகக் குழு உறுப்பினர்கள்

01. திரு. க.நா.பத்மநாதன்
02. திரு. ச.பரமகுலசிங்கம்
03. திரு. க.தெய்வேந்திரராஜா
04. திரு. ஞா.கேதீஸ்வரன்
05. திரு. மு.விஜிகரன்
06. திரு. N.ஸ்ரீபாஸ்கரன்
07. திரு. N.யோகராசா
08. திரு. சி.சிவகாமன்
09. திரு. ஆ.சேனாதிராசா

## கௌரவ கணக்காய்வாளர்

திரு கு.இரத்தினசிங்கம்

## கௌரவ காப்பாளர்

01. திருமதி. இராசமனோகரி புலேந்திரன்
02. திரு. த.தர்மபாலன்
03. திரு. க.முருகேசு

## வெள்ளோட்ட விழாமலர் வெளியீட்டுக்குழு

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | தமிழ்மணி அகளங்கன் |
| **உறுப்பினர்கள்** | : | திரு பொ.நல்லையா |
| | | திரு.வீ. குமாரசிங்கம் |
| | | திரு ரி.தர்மபாலன் |
| | | திரு என்.ஸ்ரீபாஸ்கரன் |

## தேர்த்திருப்பணிக் குழு

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | திரு **V. S.**தேவகுமாரன் |
| **செயலாளர்** | : | திரு வீ.குமாரசிங்கம் |
| **பொருளாளர்** | : | திரு க.அருந்தவராசா |
| **உறுப்பினர்கள்** | | |
| | | திரு பொ.நல்லையா |
| | | திரு என்.ஸ்ரீபாஸ்கரன் |
| | | திரு கு.இரத்தினசிங்கம் |
| | | திரு இ.சுதாகரன் |
| | | திரு ந.யோகராஜா |

உ

ஸ்ரீ சந்த்ர மௌளீச்வராய நம:

ஸ்ரீ ஆதி சங்கராச்சார்ய பகவத்பாத பரம்பராகத மூலாம்னாய ஸர்வக்ஞபீட

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி

# ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

ஸ்ரீ மடம் ஸம்ஸ்தானம்

நெ. 1 சாலைத்தெரு, காஞ்சிபுரம் 631502

திகதி 24-02-2001

---

## ஆசியுரை

நித்திய பூஜா காலங்களில் ஏற்படக்கூடிய அனைத்து தோஷங்களுக்கும் பரிகாரமாக அமைவது வருஷோற்ஷவம். இதில் முக்கிய பங்கு வகிப்பது தேர்த்திருவிழா, இவ்விழாவின் சிறப்பு கூடும் வகையில் வவுனியா ஸ்ரீ சிந்தாமணி விநாயகராலய பரிபாலன சபை அப்பெருமானுக்கு சித்திரத் தேரினை அமைத்து, வரும் சித்திரை 16ம் நாள் (29-04-2001) வெள்ளோட்டம் விடவிருப்பதையும் இதையொட்டி மலரினை வெளியிடுவதையும் அறிந்து மகிழ்கிறோம்.

ஸ்ரீ பகவத் பாதாள் ஸ்தாபித்தருளியுள்ள ஷண்மதங்களுள் ஒன்றாகிய காணாபத்யத்தின் முழு முதற் கடவுளாகிய ஸ்ரீ விநாயகப் பெருமானது இன்னருளால் நிகழ்ச்சிகள் நிர்விக்கினமாக நிறைவேறவும், மலர் தேரின் முக்கியத்துவத்தை விளக்குவதாக அமைந்து விளங்கவும் ஆசீர்வதிக்கிறோம்.

நாராயணஸ்ம்ருதி.

# அருளாசிச் செய்தி

***அருட்செல்வர்களே!***

**வவுனியாவில் எழுந்தருளியிருந்து அருள்புரியும் சிந்தாமணி விநாயகர் பெருமானுக்கு புதிதாக அமைக்கப்பட்ட தேர் வெள்ளோட்ட விழா நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சி அடைகின்றோம். ஆலயங்களில் முக்கிய விழாவாக நடைபெறுவது தேர் திருவிழா. தேரின் வடிவமைப்பு தனித்துவமான தத்துவத்தை கொண்டது. இறைவன் மூல ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் காட்சியை வெளிப்படுத்துவது. தேர் பல அமைப்புக்களில் அமைக்கப்படுகின்றது. பல சந்தர்ப்பங்களில் உபயோகிக்கப்படுகின்றது. புராண இதிகாசங்களில் தேரின் வரலாறு கூறப்பட்டுள்ளது. புராணத்தில் இறைவன் முப்புரங்களை எரிப்பதற்கும் இலக்கியத்தில் பாரி முல்லைக்கு தேரைக் கொடுத்தும் வரலாற்று சான்றுகள் ஆகும். ஆலயத்தில் நடைபெறும் தேர் திருவிழாவில் இறைவனது அருளைப் பெறும் நோக்கில் அடியவர்கள் யாவரும் வடம் பிடித்து இழுக்க வேண்டும் என்பதும் மனிதன் தன்னுடைய வாழ்வை தேர்ந்து கொள்வது என்பதையும் உணர்த்துவதாகும் (இச்சொல்லே சாட்சியிலும் சாட்சியாளர்களைத் தேர்ந்து கொள்வதற்கும் தேர்தல் என்ற சொல்லே பேசப்படுகின்றது) தேரினுடைய அமைப்பு பாதாளம், பூமி, ஆகாயம் என்பவற்றை குறிக்கின்றது இறைவன் எழுந்தருளி இருக்கும் காட்சி இறைவன் இருதயத்தானத்தில் எழுந்தருளியிருக்கும் காட்சியாகும். இவ்வாறு பல தத்துவங்ளை கொண்ட தேரை சிந்தாமணி விநாயகருக்கு உருவாக்கி வெள்ளோட்டம் செய்வது வவுனியா வாழ் சைவமக்களின் ஆன்மிக வளர்ச்சிக்கு உதவியாக அமைந்துள்ளது. இத்தேரை உருவாக்கிய கலைஞர்களை வாழ்த்துகின்றோம். சைவமக்கள் யாவரும் ஆலயத்துக்குச் சென்று வழிபட்டு அரிய பிறவியாகிய மானிடப் பிறவியை புண்ணியத்திற்குரிய வாழ்வாக அமைத்து தருமமும் தெய்வீக உணர்வும் கொண்டு வாழ்வதற்கு ஆலய வழிபாடு இன்றியமையாததாகும். அதனாலேயே "கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என்பது தேவாரமாகும். இன்நிலையில் ஒவ்வொரு மக்களும் சமய அனுட்டானப்படி வாழ்ந்து புண்ணியப் பேற்றினை பெறுவீர்களாக. இப்பணியை செய்திருக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கும், தேரை உருவாக்கிய சிவாச்சாரியார்களுக்கும் வவுனியா மக்களுக்கும் இறைவன் அருள் புரிய வேண்டுகின்றோம்.**

***" என்றும் வேண்டும் இன்ப அன்பு"***

*2வது குருமகா சந்நிதானம் .*
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசார்ய ஸ்வாமிகள்.*
*நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்*
*நல்லூர், யாழ்ப்பாணம்.*

# ஆசிச்செய்தி

வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இறையருள் துணையோடு எதிர்வரும் விஷு ஆண்டு சித்திரைத் திங்கள் 16 ம் நாள் (29.04.2001) அன்று நடைபெற உள்ளதென அறிகிறோம்.

இறைவன் தேரில் அமர்ந்து நகர் வலம் வந்து பக்தர்களுக்கு அருளாசி வழங்குகிறான். ஆனால் இது ஆண்டில் ஒரு நாள்தான் நிகழ்கிறது. அவன் என்றும் நமது இதயத் தேரில் அமர்ந்து வலம் வருவதுதான் சாலச் சிறந்தது. அதற்கு நமது இதயத்தை முதலில் தூய்மைப்படுத்த வேண்டும். அந்த இதயத் தூய்மையைப் பெறவேண்டியே கோயில் திருவிழாக்களும், விரதங்களும் மேற்கொள்ளப்படுகின்றன. மிகுந்த பக்தியுடனும் சிரத்தையுடனும் இவற்றை மேற்கொள்ள வேண்டும் எனக் கூறத் தேவையில்லை.

விநாயகப் பெருமானது அருளாசியால் வெள்ளோட்டம் வெற்றியுடன் அமையப் பிரார்த்திக்கிறோம்.

நாட்டில் அமைதியும் சமாதானமும் மேலோங்க இறையருளை வேண்டுவோமாக.

*சுவாமி ஆத்மகனாநந்தா.*
*செயலாளர்*
*இராமகிருஷ்ண மிஷன்*
*கொழும்பு*



SRI GAYATHRI DEVI

# SRI GAYATHRI PEETAM TRUST

(INTERNATIONAL)

&

SRI LANKATHEESWARAR TEMPLE



SWAMI
DR.R.R.Murugesu

*Founder - President*

**Dr.Swamy R.K. Murugesu**

**"SRI NAGAR"**
**82, Lady McCallum Drive**
**Nuwara-Eliya, Sri Lanka**
**Tel : 052 - 22609**


**06.04.2001**

உ

## ஆசிச்செய்தி

வவுனியா நகரில் எழுந்தருளி அடியார்களை ஆட்கொண்டருள் புரியும், சிந்தாமணி பிள்ளையார் எழுந்தருளி பவனி வர கட்டிய சித்திரத்தேரின் வெள்ளோட்ட விழா இம்மாதம் 29ம் திகதி நடைபெறவிருப்பது அறிந்து அகமிக மகிழ்ந்தேன்.

இப்புனித வெள்ளோட்ட விழா சீருற்ற நிலையில் சிறப்புப் பெற்று, வெற்றி பெறவும் விக்னங்கள் போக்கும் ஸ்ரீ சிந்தாமணி பிள்ளையார் பேரருள், ஆலய பரிபாலன சபையின் பிரதம குருக்கள், தேர் வடித்த சிற்பாச்சாரியார், மற்றும் பக்த கோடிகள் அனைவருக்கும் கிட்டி அமைதி, ஆனந்தம் நிறைந்த அருள் வாழ்வாம் பெருவாழ்வு வாழ அகில மனைத்தையும், ஆக்கி அனைத்து காக்கும் அகிலாண்டேஸ்வரி ஆதிஸக்கி அன்னை காயத்ரி தேவியை பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

*ஓம் சாந்தி*

*ஆர் . கே. முருகேசு*

# ஆசிச்செய்தி

## ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் துணை

அரும்பெரும் கருணையும் தருமசிந்தையும் சைவமதப்பற்றும் நிறைந்த ஆண்டவன் ஆனைமுகத்து சிந்தாமணி வீநாயகர் திருப்பாதமலர்களை நிதமும் துதிக்கும் ஆலய பரிபாலன சபையினருக்கு எமது நல்லாசிகள். கருமச் சிறப்புக் கொண்ட அடியார்களின் நிதியத்தைக் கொண்டு தங்களது முயற்சியால் கலைத்திறன் நிறைந்த சித்திரத்தேரினை அமைத்து அதன் சிறப்பான வெள்ளோட்ட விழாவையும் மகோற்சவத்தையும் உலகத்தின் மத்தியஸ்தானத்தை வகிக்கும் நிலையில் இரதரோகண விழாவில் விநாயகப் பெருமான் ஆரோகணித்து வரும் அரும்பெரும் திருக்கோலக்காட்சியைப் பக்தப்பெருமக்கள் மனமார வணங்கி நாட்டில் நடக்கும் யுத்த பயம் வறுமை களவு காமம் கொலை என்பவற்றினின்றும் மக்கள் விடுதலை பெற விநாயகர் திருவருள் பாலிக்க வேண்டி எமது மனமார்ந்த அருளாசிகளை அன்புடன் தெரிவிக்கிறேன். முதல் பிரதிஷ்டா கும்பாபிஷேகத்தை நடத்தி வைக்கும் கைங்கர்யம் எமக்கு கிடைத்ததையிட்டு மனமார தியானித்து நம்பிக்கை உண்டேல் தும்பிக்கை துணை செய்யும் என்பது உறுதி என்ற வார்த்தைக்கமைய விநாயகரது பாதமலர்க்கமலங்களை வணங்கி எமது ஆசிகளை எல்லோருக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*சுபம்*

*'லோகா சமஸ்தா சுகினோ பவந்து'*

*இங்ஙனம்*
*பிரதிஷ்டாசிரோன்மணி*
*சாமி விஷ்வநாதக் குருக்கள்*
*(நாவாலியூர் – கொழும்பு)*

# ஆசியுரை

## ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்டம்

"ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்து அடி போற்றுகின்றேனே"

சைவத்திருக்கோயில்களால் இன்று சிறப்புப் பெற்ற நகரமாக விளங்குவது வவுனியாப் பகுதியாகும். இப் பகுதியிலே இடம் பெற்ற ஆலயங்களில் திருப்பணிகள் காலத்துக்குக் காலம் சிறப்பாக நிறைவேறுவதை நாம் அறிந்து கொண்டிருக்கிறோம். ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம் இவற்றுள் சிறப்பிடம் பெறுவதாகும். பத்து ஆண்டுகளுக்கு முன்பு நான் இங்கு சென்று உரையாற்றி இருக்கிறேன் என்பது குறிப்பிடத்தக்கது. தொண்டர்களையும் உபகாரிகளையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்ற இடம் இதுவாகும். பிறக்கப் போகும் புதுவருடச் சித்திரைத் திங்களில் அருள் மகத்துவம் மிக்க தேர் வெள்ளோட்ட விழா இங்கு நடைபெற இருப்பது குறித்து பெருமகிழ்ச்சியடைகிறேன்.

ஒரு ஆலயத்துக்கு அமைய வேண்டிய மூவகைத் திருப்பணிகள் இராஜ கோபுரம், சித்திரத்தேர், தீர்த்தக்குளம் என்பனவாகும், மகோற்சவங்களில் ரதோற்சவம் சிறப்பான இடத்தைப் பெறுகிறது. ஒவ்வொரு ஆலயத்தினோடும் சம்பந்தப்பட்ட விழாவாக ரதோற்சவம் என்பது விளங்குகிறது. ஆலயம் என்னும் அமைப்பில் தேர் என்பது ஒரு பகுதியாக அமைந்திருக்கின்றது. ஓடுதல் என்னும் செயலில் ரதம் உடல் தத்துவத்தை நன்கு விளக்குகிறது. சரீரத்தை ரதம் என்றும் அதன் உள்ளிருக்கும் ஆத்மாவை ரதி அல்லது ஊர்ந்து செல்பவள் என்றும் கருத வேண்டுமென ஞான சாஸ்திரங்கள் புகட்டுகின்றன. சரீரத்திலுள்ள இயல்புகளை எல்லாம் ரதத்தில் அமைப்பது வழக்கமாயிருந்து வருகிறது. ஒன்று நிலைத்திருக்கும் சின்னம், மற்றது இயங்குகின்ற சின்னம். அவைகளின் மூலம் விளக்கப்படும் கருத்தும் ஒன்றேயாகும்.

பஞ்சகிருத்தியங்களில் சங்கார தத்துவத்தை உணர்த்தி நிற்பது தேர் உற்சவம் ஆகும். திரிபுரங்களை எரித்த விரிசடைக் கடவுளின் அற்புதமான திருவிளையாடல் இவ் உற்சவத்தில் உணர்த்தப்படுகின்றது.

நன்மை தீமைகளுக்கிடையே ஏற்படுகின்ற போட்டிகளையே புராணக் கதைகளும் உற்சவ விளக்கங்களும் உணர்த்துகின்றன. இப் போட்டி என்றுமே இருந்து கொண்டிருக்கும். ஆனால் முடிவிலே வெற்றி பெறுவது நன்மை ஒன்றேயாகும்.

இக் காலச் சூழ்நிலையில் நாம் தஞ்சமடைய வேண்டிய இடம் திருக்கோயில்களே ஆகும். நித்திய, நைமித்திய விழாக்களினால் திருக்கோயில்களை எழுச்சி பெற வைக்க வேண்டியவர்கள் நாங்கள். கோயில்களில் பூசைகள் விழாக்கள் ஒழுங்காக நடைபெற்றால் வீடும் நாடும் சிறக்கும், மக்கள் வாழ்வு மேலோங்கும் என்பது அருளாளர்களின் கருத்தாகும். எனவே வவுனியா வாழ் சைவ மக்கள் இதனை மனதிற் கொண்டு விநாயகப் பெருமானுக்கு அழகான சித்திரத்தேரை உருவாக்கி உள்ளனர், இத் திருப்பணியில் பங்கு கொண்ட சிற்பாசாரியார்கள், ஆலய அறங்காவலர்கள் அன்பர்கள் அனைவரையும் வாழ்த்தி ஆசிகூறி அமைகின்றேன்.

*கண்ணுதலா லயம் நோக்கும் கண்களே கண்கள்*
*கறைக் கண்டன் கோயில் புகுங் கால்களே கால்கள்*
*பெண்ணொரு பாகனைப் பணியும் தலைகளே தலைகள்*
*பிஞ்ஞகனைப் பூசிக்கும் கைகளே கைகள்*
*பண்ணவன் தன் சீர்பாடும் நன்னாவே நன்னா*
*பரன்சரிதை கேட்கின்ற செவிகளே செவிகள்*
*அண்ணல் பொலன் கழல்நினைக்கும் நெஞ்சமே நெஞ்சம்*
*அவனடிக்கீழ் அடிமைபுகு மடிமையே அடிமை.*

துர்க்கா துரந்தரி
கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி.
சமாதான நீதிபதி
தலைவர் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை
ஸ்ரீலங்கா

உ
கணபதி துணை


சிவஸ்ரீ மு.க.கந்தசாமி குருக்கள்
(கைரேகை சோதிட வல்லுநர்)
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
பிரதம குரு
குடியிருப்பு, வவுனியா.

*Sivasri M.K.Kandasamy Kurukkal*
(Specialist in Palmistry and Astrology)
**SRI SITHIVINAYAGAR TEMPLE**
**CHIEF PRIEST**
**KUDIYIRUPPU, VAVUNIYA.**


# ஆசியுரை

வாக்குண்டாம் நல்ல மனம் உண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது – பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமல் சார்வார் தமக்கு.

**வவுனியா நகரில் வெளிவட்ட வீதியில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ. சிந்தாமணி விநாயகர் ஆலயம் எனக்கு நன்கு பரிச்சயமான ஆலயம். அவ்வாலயத்தில் ஏறக்குறைய 10 ஆண்டுகள் பூசை செய்யும் பாக்கியம் எனக்கு கிடைத்தது என் வாழ்நாளில் மறக்கமுடியாதது.**

**இவ்வாலய பரிபாலன சபையினர் மிகவும் ஊக்கமுடன் வவுனியா நகரில் முதன் முதல் தேர் இழுத்த பெருமை இவ்வாலயத்தை சாரும். பிள்ளையார் குழந்தை போல் தோன்றினாலும் பக்தர்களை கை தூக்கி உயர்த்திவிடுவதிலும் முதல்வராக உள்ளார் என்பதை கூறிக் கொள்ள விரும்புகிறேன்.**

**அதே போல் தற்பொழுது பரிபாலன சபையினரின் உள்ளத்திலும் புகுந்து தனக்கு தேவையான ஒவ்வொன்றையும் செய்து வருகிறார். அதில் தற்பொழுது செய்யப்பட்டு இருக்கும் சித்திரத்தேர் பல சிறப்பு அம்சங்களையும் உடையதாக சிற்பவல்லுனர் கலாமோகனின் கைவண்ணத்தில் சிறந்த தேராக உருவாகியுள்ளது. அடியார்கள் தேர் தானே என்று எண்ணுவர். ஆனால் அத்தேரில் எத்தனை வேலைகள் எத்தனை விதமான தத்துவ சிற்பங்கள் உள்ளன என்பதையும் அறிந்து கொள்ளவேண்டும். இத்திருத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பாய் நடைபெற எல்லாம்வல்ல சித்தி விநாயகனை வேண்டி அருளாசியை வழங்குகிறேன்.**

***சுபமஸ்த்து.***


சிவஸ்ரீ மு.க.கந்தசாமி குருக்கள்
சமாதான நீதவான் (அகில இலங்கை)
ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்
**குடியிருப்பு, வவுனியா, இலங்கை**
**பதிவு இல.** 2000/08/NE/ISLAND/B/067
தொ.பே: 024 - 21246

# ஆசியுரை

அங்கிங்கெனாதபடி எங்கும் விரிந்து சர்வவியாபியாய் வீற்றிருந்து அடியார்களின் விக்னங்களை நீக்கி சர்வ வல்லமைகளையும் அருளும் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டிருக்கும் சித்திரத் தேர் வெள்ளோட்டம் அறிந்து மகிழ்ச்சி அடைகிறோம். பஞ்சகிருத்தியத்தில் சம்கார உற்சவம் என அழைக்கப்படுவது ரதோற்சவம். சம்காரம் அழித்தல் தொழிலை குறிக்கிறது. அழித்தல் என்பது ஆன்ம கோடிகளாகிய அடியார்களின் காம, குரோத, மத, மாச்சர்யம் என்னும் இவ்வினைகளை இறைவன் ரதத்தில் ஏறிவந்து அழித்துப் புனிதனாக்குகிறான். மும்மலங்கள் நீங்கி மோட்சசாதனத்திற்கு ஏதுவாக இருப்பது ரதோற்சவம்.

மும்மலங்களாகிய முப்புர அசுரர்களை அழிக்க சிவபெருமான் ரதமேறினான். தீயவற்றை அழித்து தர்மத்தை நிலைநாட்ட கண்ணன் ரதமேறினான். எனவே தீய சக்திகள் தீய வினைகள் அழிந்து தர்மத்தையும் திருவருளையும் அருள புதிய சித்திரத் தேர் நிர்மாணிக்க உதவிய பொது மக்களுக்கும் ஆலய தர்மகர்த்தாக்களுக்கும் எல்லாம் வல்ல சிந்தாமணி விநாயகர் நல்லருள் பாலிப்பார் எனகூறி எல்லோருக்கும் எனது நல்லாசிகளையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

*உயர் பீடம் – சிவஸ்ரீ குமார – ஸ்ரீ காந்தக் குருக்கள்*
*(ஆலய மகோற்சவக் குரு)*



# ஆசிச் செய்தி

*பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை*
*நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்*
*துங்கக் கரிமுகத்து தூமணியே நீஎனக்கு*
*சங்கத் தமிழ் மூன்றும் தா.*

வவுனியா நகரில் உள்ள விநாயகர் ஆலயங்களில் பிரபல்யமான ஆலயமாக விளங்குவது வெளிவட்டவீதியில் உள்ள சிந்தாமணி விநாயகர் ஆலயமாகும். இத்தகைய பெருமைக்குரிய இவ் ஆலயத்தில் தேர்த்திருப்பணி நடைபெற்று நிறைவேறி வெள்ளோட்ட விழா நடைபெற்று எம் பெருமான் ரதத்தில் எழுந்தருளி சைவ மக்களுக்கு அருள் பாலிக்கும் நன்னாளை காண்பது அரும் பெரும் பாக்கியமாகவே கருத வேண்டும். இவ் ரதோற்சவமானது இறைவன் ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற்காக மேற்கொள்ளும் ஐந்தொழில்களில் அழித்தல் தொழிலை நினைவூட்டுவதாக உள்ளது. அழித்தல் என்பது நாம் செய்த பாவங்கள் அனைத்தையம் இல்லாதொழித்து நல்லருள் வழங்குவதை உணர்த்துகின்றது. இவ்வாறு பல உயர்ந்த தத்துவங்களை உணர்த்தி நிற்கும் இரதோற்சவ விழாவில் கலந்து அருள் பெற்று இன்னல்கள் யாவும் நீங்கி மக்கள் அனைவரும் சீரும் சிறப்பும் பெற்று வாழ அருள் மிகு வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீசிந்தாமணி விநாயகரின் பாத கமலங்களை வணங்கிப் பிரார்த்தித்து நல்லாசிகள் அனைவருக்கும் கிடைக்க பிரார்த்திக்கின்றேன்.

*திருச்சிற்றம்பலம்*

*சிவஸ்ரீ. மு. சங்கரநாராயணக்குருக்கள்*
*கிரியா குரு*
*ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்*
*வவுனியா*

ஓம்
கணபதி துணை



# ஆசிச் செய்தி

*"வேழ முகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்"*

வவுனியா வெளிவட்ட வீதியில் கோவில் கொண்டு எழுந்தருளி அருள் பாலிக்கின்ற அருள்மிகு ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமானின் சித்திரத்தேர் வெள்ளோட்ட நாள் இந்த ஆலயத்தின் வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியதொன்றாகும்.

இந்தச் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்பாக நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ சிந்தாமணி விநாயகரின் திருவருட் கடாட்சத்தை வேண்டி நிற்கின்றேன்.

இச்சித்திரத் தேரினைச் சிற்ப, ஆகம விதிமுறைகளுக்கு அமைவாக உருவாக்கித் தந்த ஸ்தபதி சிற்ப கலாலயத்தின் அதிபரான திரு. க. கலாமோகன் மற்றும் அவரது குழுவினரின் பணி பாராட்டத்தக்கது.

மேலும் இத் திருப்பணிக்கு அயராது உழைத்த ஆலய பரிபாலன சபையினருக்கும் இத் திருப்பணிக்கு சகல வழிகளிலும் பங்காற்றிய அனைவருக்கும் எல்லாம் வல்ல ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமானின் பரி பூரணமான திருவருள் கிடைக்க அருளாசி வேண்டி நிற்கின்றேன்.

*"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்"*

*சுபம்.*

*சிவ ஸ்ரீ தர்மலிங்கக்குருக்கள் நாகேஸ்வரசர்மா*
*ஆலய உதவி அர்ச்சகர்*
*சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயம்*
*வெளிவட்ட வீதி*
*வவுனியா.*

# ஆசியுரை

வன்னிமாவட்டம் பழம் பெருமை வாய்ந்தது. அதிலும் வவுனியா என்று சொன்னால் சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய பெரியார்கள் வாழ்ந்த பெருமையுடையது. அதற்கேற்ப எங்கு பார்த்தாலும் சைவக்கோவில்கள் அனந்தம். அக்கோவில்களிலும் விநாயகருக்கு கோவில்கள் அமைத்து வழிபடும் மரபு மிகவும் தொன்மை வாய்ந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. அவ்வகையில் அமைந்துள்ள வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணிப்பிள்ளையார் என்றால் தெரியாதவர்கள் இல்லை எனலாம். எங்கிருந்து வந்தவர்களும் புகையிரத நிலையத்தில் இறங்கியவுடன் சிந்தாமணிப் பிள்ளையாரைத்தரிசிக்க முடியும். அப்பெருமானுக்குச் சித்திராபூரணையிறாக மகோற்சவ விழா தொடர்ந்து நடைபெறும் நைமித்திய விழாவாகும். இவ்விழாவிற்கு முக்கிய அம்சமான தேர்த்திருவிழாவிற்காக ஓர் புதிய சித்திரத் தேரை நிர்மாணித்து வெள்ளோட்டவிழா இன்று சிறப்பாக விநாயகர் திருவருளோடு நடைபெறுகின்றது.

அப்பெருமானின் திருவருளோடு ஆலய பரிபாலன சபையின் திருப்பணிச் சபையினரின் அதிசிரத்தையான பணியிலும் தர்மப்பொருள் கொடுத்தவள்ளல்களின் அறக்கொடையிலும் இச்சித்திரத்தேர் உருவாகி இன்று அழகுற நிமிர்ந்து நிற்கின்றது. இச்சித்திரத்தேரைச் சிற்பக்கலை வண்ணங்களுடன் அழகுற நிர்மாணித்தவர் சாவகச்சேரி மட்டுவிலூர் சிற்பக்கலைச் செல்வன் திரு. இ. கலாமோகன் அவர்கள். பிள்ளையார் கோவில்களில் இவரது கலைவண்ணத்தில் சித்திரத்தேர்கள் மிளிர்கின்றன. அத்துடன் அவர் செய்து கொடுத்த வாகனங்களும் அவற்றின் அழகும் உறுதியும் அளவில. இவற்றின் சிறப்பு என்னவென்றால் அவரது பண்பு நேர்மை அனைவரிடமும் அன்புடன் பழகும் தன்மை சிற்பவேலைகளின் திறமை உறுதி அழகு என்பனதான் அவர் இக்கலையில் உயர்வாக விளங்குவதற்குக் காரணம். இவைகளையறிந்த வவுனியா ஆலய பரிபாலன சபையினர் அவரைத் தமது கோவிலுக்கு ஏற்பாடு செய்து இச்சித்திரத்தேரைச் செய்வித்திருக்கிறார்கள். பெருமானுடைய திருவருளும் ஆசாரியார் அவர்கள் மனம் வைத்துச்செய்த கலை வண்ணமும் சேர்ந்து விநாயகருக்குரிய பிரணவரூபமான வட்ட வடிவத்தோடமைந்த தேர் அழகுற அமைந்துள்ளது. எல்லாம் வல்ல சிந்தாமணிவிநாயகர் திருவருளால் இச்சித்திரத் தேரை அமைக்க முன்வந்த ஆலய பரிபாலனசபையினர், திருப்பணிச்சபையினர் நிதி கொடுத்த வள்ளல்கள், பொருள் கொடுத்த கொடையாளிகள் பணிசெய்த தொண்டர்கள் அடியவர்கள் பெருமைக்குரிய சிற்பாசாரியார் கி.கலாமோகன் குழுவினர் அனைவரும் பெரியவர்கள் பெருமைக்குரியவர்கள்.

அவர்கள் நீடூழி வாழவும், தெய்வீகக்கலைகள் சிறக்கவும் வாழ்த்துவதோடு இன்று நடைபெறும் வெள்ளோட்ட விழா நன்கு நடைபெறவும் எல்லாம்வல்ல விநாயகன் பதம் பணிந்து ஆசிகூறி அமைகின்றேன்.

***வாழ்க வளர்க வணக்கம்***

## அவர்களைப் பற்றிச் சிலவரிகள் மகிழ்வுடன் தெரிவிக்கின்றேன்.

தென்மராட்சி சகல கலைகளுக்கும் சிறப்பு வாய்ந்த ஓர் பிரதேசம். குருத்துவம் சோதிடம் இசை நாதஸ்வரக்கலை. ஓவியம் ஆலயக் கட்டட சிற்ப நிர்மாணம் தேர் வாகனம் போன்ற தெய்வீகச்சிற்பக்கலை என்பவற்றிற் சிறந்த விற்பன்னர்கள் வாழ்ந்து இக்கலைகளை வளர்த்தவர்கள் இன்றும் வளர்த்துக் கொண்டு இருக்கிறார்கள். அவ்வழியில் தெய்வீகச் சிற்பக்கலைகளைப் பரம்பரையாக வளர்த்து வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்தான் திரு.கி. கலாமோகன் அவர்கள். சாவகச்சேரியில் மட்டுவில் என்றால் ஆசுகவி.ம.க. வேற்பிள்ளை ஆசிரியர், இலக்கிய கலாநிதி பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்கள் புராண ஆசிரியர் திரு சங்கரப்பிள்ளை ஆகிய பெரியார்கள் வாழ்ந்து பெருமை தேடித்தந்த சிறப்புடைய ஊர். அத்தோடு பழம்பெரும் பெருமைவாய்ந்த கல்வம் சிவன்கோவில் அருள்மிகு பன்றித்தலைச்சி அம்மன்கோவில் ஆகிய தெய்வீகத்தலங்களையும் தன்னகத்தே கொண்டவூர் மட்டுவில். இவ்வகைச்சிறப்புடைய மட்டுவிலில் பரம்பரையாகச் சிற்பக்கலைகளில் சிறப்புவாய்ந்த திரு. கிருஸ்ணன் ஆசாரியார் குடும்பத்தில் பிறந்தவர் தான் எமது கலாமோகன் அவர்கள். அவர்களுடைய சிற்பக்கலைத்திறன் சாதாரணமானதல்ல. சரசாலை ஸ்ரீ சிதம்பர விநாயகர் ஆலயத்திற்குஅவர் தமது கைவண்ணத்தில் செய்து கொடுத்த சித்திரத் தேர் இவரது முதல் சித்திரத்தேர் என்ற பெருமையைக் கொடுத்தது. அதைத்தொடர்ந்து சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கையம்மன் கோவில், கல்வயல் வேதவனப் பிள்ளையார் கோவில், சாவகச்சேரி ஸ்ரீ முத்துமாரியம்மன்கோவில் நுணாவில் ஸ்ரீ கந்தசாமி கோவில் (வைரவர் கோவில்) சாவகச்சேரி இத்தியடி.

*இவ்வண்ணம்*
*வாழ்த்தும்*
*கிரியாகானகலாமணி வேதாகமஜோதி*
*சிவஸ்ரீ கி. சோமசுந்தரக்குருக்கள் (மட்டுவில்)*
*பிரதமகுரு*
*கல்வயல் வேதவனப்பிள்ளையார் கோவில்*
*சாவகச்சேரி ஸ்ரீ துர்க்கையம்மன் கோவில்*
*நுணாவில் ஸ்ரீ கந்தசாமி கோவில்*

පාර්ලිමේන්තුව
பாராளுமன்றம்
**PARLIAMENT**

*56, வைரவப்புளியங்குளம்,*
*வவுனியா.*
*02.04.2001*

உ

# வாழ்த்துச் செய்தி

*அன்பே சிவம் - அறமே தெய்வம்*

வவுனியா நகரிற்கு அருளையும், அழகையும் அள்ளித்தருகின்ற, சிந்தாமணிப்பிள்ளையார் ஆலய புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டத் திருவிழா இனிதே நடைபெற்று எல்லா மக்களும் சகல பாக்கியங்களையும் பெற்றுய்ய விக்னம் தீர்க்கும் விநாயகப் பெருமானின் திருப்பாதம் வணங்கித் துதிக்கிறேன்.

தினமும் உழைப்பதும் உண்பதும் உறங்குவதுமாய் இயந்திர வாழ்க்கை நடாத்துகின்ற மக்களும், இன்னலே வாழ்க்கை என்றாகிவிட்ட மக்களும் சாந்தி சமாதானம் பெற இன் நாளில் பிரார்த்தனை செய்கிறேன்.

வன்னிமா நகருக்கு அழகும், அருளும் சேர்த்த சித்திரத்தேர் வெள்ளோட்டத்திற்கு வழியமைத்த அறங்காவலர் சபையினருக்கும், அடியார்க்கும், ஆன்மீகப் பெருமக்கள் அனைவருக்கும் இறைவனின் அருள் பாலிக்க வேண்டி நிற்கின்றேன்.

*செல்வம் அடைக்கலநாதன்*
*வன்னி பாராளுமன்ற உறுப்பினர்,*
*தலைவர்,*
*தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ)*

# வாழ்த்துச் செய்தி

சிந்தாமணி விநாயகரின் சித்திகளை எடுத்தியம்பலரிது. ஒவ்வொரு ஆண்மாவும் சிந்தாமணி விநாயகரின் தரிசனத்தில் பெற்ற முத்தி யொகங்களின் எம் முழுமுதற் கடவுள் பிள்ளையாரின் புகழ்பாட நித்தம் நித்தம் நாம் காணும் பக்தர் கோடியே சான்றுபகருவர்.

நினைத்ததை நடத்த, கேட்பதைப் பெற்றுக்கொள்ள எமது உள்ளத்தை தூய்மையாக்கி எம்வேண்டுதலை நிறைவு செய்ய, சிந்தாமணி விநாயகர் செயல்ரூபமாய் எம்மை ஆட்கொண்டு எமை வழிநடத்துகின்றார். அற்புதத்தின் செயல் வீரனாக எம்முள் வியாபித்து நின்று செயல்படுத்தி வழிகாட்டும் எம்பெருமான் தம்மிடம் தஞ்சமென வருவோர்க்கு ஒரு மனதாய் இறஞ்சி நிற்போர்க்கு மானிடப்பிறப்பின் அகங்காரத்தையும் உள்ளத்திலிருக்கும் மாயையையும் அகற்ற உள்ளம் உருகி எமது வேண்டுதலுக்கு ஒப்ப புனிதத்துவத்தோடு சிந்தாமணி விநாயகரை வேண்டி நிற்போம். துன்பங்கள் விரைந்தோட புதுத்தெம்பு, தெளிவு எமை ஆட்கொள்ள விநாயகரின் அற்புதத்தில் நீங்கள் சகலதும் பெற்று பெருவாழ்வு வாழ்வீர்கள்.

சிந்தாமணி விநாயகர் ஆரம்பகாலம் முதல் படிப்படியாக உற்சவங்கள் கண்டு முன்னேறி வியாபித்து அருங்காட்சி தந்து எம்பெருமான் சித்திரத்தேரில் பவனி வந்து எம் துயரங்களை தூசாகத் தூரவிலக்கி வவுனியா மக்களை ஆட்கொள்ள எழுந்தருளி வருவதும் பக்தர்கள் எல்லாம் சிறுதுரும்பாக இருந்தாலும் எல்லாம் அந்த விநாயகரின் அருட்கடாட்சமேயாகும்.

திங்களணி சடைப்பெருமான் பூசையாற்றித்
திரிமதிலுங் கடந்திட முன் நின்றான் யாவன்?
தாங்குகடற் புவிவரைப்பின் நெடியோன் ஆதி
சகலருக்கும் ஊறுதவிர்க் கின்றான் யாவன்?
அங்கவன் மெய்ச் சரிதமொழி பெயர்பவேண்டி
அவனடியே சரணாக அடுத்துளோற்கு
மாங்கலசின் மயமதுரத் தமிழ்ச் செம்பாடல்
மாரிமட மடையுருத்து வளருமன்றே.

*திருமதி ராஜமனோகரி புலேந்திரன்.*

**Mrs. R.M Pulendran**
**D31/2 Manning Town Flats ,**
**Colombo - 8**

# வாழ்த்துச் செய்தி

எல்லா வளங்களும் இனிதே வாய்க்கப்பெற்ற வன்னித் திருநாட்டின் மத்தியில் சீருடனும் சிறப்புடனும் விளங்கும் வவுனியா நகரின் மத்தியில் ஒளி விளக்காகப் பிரகாசித்து அருள் பாலிக்கின்ற சிந்தாமணி விநாயகப் பெருமானுக்குச் சித்திரத்திருத்தேர் சித்திரைத் திங்களில் வெள்ளோட்டம் நடைபெற எழிலுடன் அமையப்பெற்றுள்ளதையிட்டு அளவற்ற மகிழ்வடையும் அடியார்குழாத்தில் நானும் இணைந்து கொள்வதையிட்டுப் பெருமையடைகிறேன்.

பரம் பொருளாகிய சிவபெருமான் சூரிய சந்திரர்கள் சக்கரங்களாகவும், நான்கு வேதங்கள் குதிரைகளாகவும் மற்றைய சரம் அசரம் ஆகிய பொருட்கள் ஒவ்வொரு உறுப்புகளாகவும் அமையப்பெற்ற தேரில் மேருவை வில்லாகவும் விஷ்ணுவை அம்பாகவும் கொண்டு எழுந்தருளி பிரமாவாகிய சாரதி பிரணவமாகிய சவுக்குக் கொண்டு செலுத்த முப்புரத்தசுரர்களையும் தமது சிரிப்பால் எரித்து அருளினார். திரிபுர சங்காரத்தின் உண்மைக் காட்சியே இரதோற்சவம் எனலாம். அதாவது எம்மைப் பிடித்துள்ள ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழித்து இம்மையிலும் மறுமையிலும் பேரின்பப் பெருவாழ்வு கிடைப்பதை உணர்த்துவதே இத்தேர்த்திருவிழாவாகும்.

இந்த வகையில் கலைத்திறன் மிக்க இளங்கலைஞன் ஸ்தபதி. சிற்பகலாரத்தினம் மட்டுவில் கிருஷ்ணர் கலாமோகன் அவர்களின் கைவண்ணத்தில் அவர்தம் உதவியாளர்களின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்ட இத்திருத்தேர் எழில்மிகு பொலிவுடன் விளங்குகின்றது.

இத்திருத்தேரில் ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமான் எழுந்தருளி வீதிவலம் வரும் காட்சியைக் காணப்பேறு பெற்றவர்கள் பெரும் பாக்கிய சாலிகளே.

அத்துடன் இத்தரிசன மூலம் அடியார்கள் அனைவர்க்கும் நல்லருள் கிடைக்கப் பெறவும் சாந்தி சமாதானம் பெற்று பெருவாழ்வு கிடைக்கப் பெறவும் எல்லாம் வல்ல சிந்தாமணி விநாயகப் பெருமானுடைய திருவருள் கிடைக்க வேண்டுமெனப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

V.S. *தேவகுமாரன்*
*தலைவர்*
*ஆலய பரிபாலன சபை/தேர்த்திருப்பணிச் சபை.*

உ

வவுனியா அரசாங்க அதிபரின்

# வாழ்த்துச் செய்தி

## வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகப்பெருமானின் சித்திரத்தேர் வெள்ளோட்டம்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க வவுனியா வெளிவட்ட வீதியில் முச்சிறப்புக்களுடனும் எழுந்தருளியிருந்து தம்மைநாடிவரும் அடியவர்க்கெல்லாம் அருள் பாலிக்கின்ற ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமானுக்கு சித்திரத் திருத்தேர் இனிதே அமைவுறப் பெற்றதையிட்டு பெருமையுறும் அடியவர்களுடன் யானும் இணைந்து பெரு மகிழ்வடைகிறேன்.

இந்த ஆலயப் பெருமக்களின் முயற்சியால் அடியார்களின் உதவியைக் கொண்டு அழகுற நிர்மாணிக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்டம் 29.04.2001 அன்று இனிதே நடைபெற எல்லாம் வல்ல ஸ்ரீ சிந்தாமணி விநாயகப்பெருமான் திருவருள் கிடைக்கப் பிரார்த்தித்து வாழ்த்துகிறேன்.

*க. கணேஷ்*
*அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலாளர்*
*வவுனியா*

உ

சிந்தாமணி விநாயகர் அருள் புரிவார்

## வாழ்த்துச் செய்தி

வட பகுதியின் எல்லையில், வவுனியா வெளிவட்ட வீதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் பல ஆண்டுகளாக இப்பகுதி மக்களுக்கு அருள் நல்கி வருவதுடன் அல்லல், துன்பங்களிலிருந்தும் மக்களைக் காத்து அருள்புரிகின்றார். சுமார் முப்பது நாற்பது வருடங்களுக்கு முன்பு அரச ஊழியர்கள் சிலராலும் அடியார்களாலும் திருவுருவ வழிபாட்டுடன் ஆரம்பிக்கப்பட்ட ஆலயம், வளர்ந்து கட்டடங்களையும் தீர்த்தக் கேணியையும் கொண்டதாக மாற்றமடைந்ததுடன் புதிய சித்திரத் தேரையும் அமைத்துக் கொண்டது வித்தக விநாயகரின் அருளினாலும் அடியார்களது முயற்சியினாலும் என்றுதான் சொல்லத்தோன்றுகின்றது.

சித்திரத் தேர் சிறப்பாக நடைபெறவும் வித்தக விநாயகர் அருள் மேலும் பெருகவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*உடுவை. எஸ். தில்லைநடராஜா*
*மேலதிகச் செயலாளர்*
*கல்வி அமைச்சு,*
*'இசுருபாய',*
*பத்தரமுல்ல.*
*2001–02–26*

## வவுனியா பிரதேச செயலாளரின்

# வாழ்த்துச் செய்தி

வனவளமும், நீர்வளமும், நிலவளமும் மிகுந்த வன்னி மண்ணின் சமய, கலை, கலாசாரப் பாரம்பரியங்களைப் பறைசாற்றி நிற்கும் ஆலயங்களில் வவுனியா அருள்மிகு ஸ்ரீ சிந்தாமணிப் பிள்ளையார் கோவிலும் ஒன்றாகும். 1967 இலிருந்து அடியார்களை அரவணைக்கத் தொடங்கிய இவ்வாலயம் 1986ல் கும்பாபிஷேகச் சிறப்புக் கண்டு எதிர்வரும் 29.04.2001 அன்று இருபது இலட்சம் ரூபா செலவில் நிறுவப்பட்ட தேரினை வெள்ளோட்டம் காண விருப்பதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

வவுனியா நகரின் மையத்திலமைந்து பல ஆயிரக்கணக்கான பக்தர்களின் பாதஅடிகள் பட்ட இவ்வாலய முன்றலில் விநாயகப் பெருமானின் தேர்ச்சுவடு படும் பொன்னான நாளில் விநாயகப் பெருமான் அனைத்து மக்களும் சாந்தி, சமாதானத்துடன் பல சிறப்பும் பெற்று வாழ அருள் பாலிக்க வேண்டுமென வேண்டுகின்றேன்.

அன்பும், அறனும் சிறக்க அடியார்கள் உள்ளன்போடு இந்து சமயத்தைச் சிறப்புடன் போற்றி வளர்த்து வரும் ஆலயங்கள் பல சூழ்ந்துள்ள இப்புனித பூமி, என்றும் அனைத்து மக்களையும் அரவணைத்து அல்லல் தீர்த்து வாழ்வளிக்க, விநாயகப் பெருமான் இம்மாவட்டத்து மக்களைச் சுபீட்சமாக வாழவைக்கவேண்டும் என இறைஞ்சுகின்றேன்.

இடம்போதாமை இருந்தாலும் இவ்வாலயம் சீருடனும் சிறப்புடனும் இங்குள்ள இந்து மக்களின் மதத்தேவைகளைப் பூர்த்தி செய்யவும், மதத்தை வளர்ப்பதில் உயர்வடையவும், மூர்த்தி, தலம், தீர்த்தம் பொங்க அமையவும் விநாயகப்பெருமானின் அடியினைப் பிரார்த்திக்கின்றேன்.

*திருமதி இமெல்டா சுகுமார்*
*வவுனியா பிரதேச செயலாளரும்*
*அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரும்*
*(வவுனியா நகரசபை)*

உ

சிவமயம்.

வடமாகாண மேல்நீதிமன்ற (வவுனியா) நீதிபதி திரு ந.யோகசிகாமணி அவர்களின்

## வாழ்த்துச் செய்தி

வவுனியா சிந்தாமணிப் பிள்ளையார் ஆலயச் சித்திரத்தேர் வெள்ளோட்டம், இம்மாதம் 29ம் திகதி நடைபெற உள்ளது. சைவப் பெருமக்கள் எல்லோருக்கும் இன்பம் பயக்கும் செய்தியாகும். மகோற்சவ காலத்தில் எல்லோரும் தவறாது கலந்து கொள்ளும் உற்சவம் தேர் உற்சவமாகும். ஊர் கூடித் தேர் இழுத்தல் என்பதற்கிணங்க ஒரு ஊர் அல்லது குறிச்சியிலுள்ள சகலரும் பேதமின்றி கூடி இழுத்தால் தான் குன்று போன்ற அழகிய தேர் அசைந்தசைந்து அழகாக வீதி வலம் வரும். இந்த அரிய காட்சி தென்னிந்திய சிற்பக் கலையின் ஒரு சிகரம் எனலாம். அப்படியான இரதத்தில் ஏறி சிந்தாமணிப் பிள்ளையார் பாலர், வயோதிபர், நோயாளிகள் உட்பட சகலருக்கும் தமது தனிப்பெருங் கருணையால் காட்சி கொடுத்து அருள இருப்பது இவ்வூர் மக்கள் செய்த தவப்பேறாகும்.

இந்த சிறந்த திருப்பணியை முன்னெடுத்த ஆலய பரிபாலன சபையினர், பொருளுதவி செய்த பெருமக்கள், தேரை வடிவமைத்த சிற்பக் கலைஞர்கள் ஆகிய அனைவருக்கும் விநாயகப் பெருமான் பேரருள் கிடைக்கு மென்பதில் ஐயமில்லை.

**23.04.2001**
*மேல் நீதிமன்றநீதிபதி இல்லம்,*
*வவுனியா*

*ந.யோகசிகாமணி*

உ

# வாழ்த்துச் செய்தி

வவுனியா, வெளிவட்ட வீதி, ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாவையொட்டி வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு எனது ஆசிச் செய்தியை வழங்குவதில் மிக்க மகிழ்வடைகின்றேன்.

மூர்த்தி, தலம், தீர்த்தம் முறையாக வாய்க்கப்பெற்ற இவ்வாலயத்தில் 1986ல் மகா கும்பாவிஷேகமும் 1987ல் கொடியேற்ற வைபவமும் அவ்வாறே 1988ல் தீர்த்தக் கேணியும் அமைக்கப்பட்டு ஆலயம் மிகச் சிறப்புற இயங்கி வருகின்றது. தற்போது ஆலயத்தின் இன்னொரு வளர்ச்சிப் படியாக சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு அதன் வெள்ளோட்ட விழாவும் நடைபெறவுள்ளமை இறைவன் திருவருள் என்றே எண்ணத் தோன்றுகின்றது. சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற நிகழவும் ஸ்ரீ சிந்தாமணி விநாயகப் பெருமானின் அருட் கடாட்சம் அனைவருக்கும் கிட்டவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

*சாந்தி நாவுக்கரசன்*
*பணிப்பாளர்*
*இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம்*
*248/1, காலி வீதி.*
*கொழும்பு – 04*

உ
சிவமயம்

# வாழ்த்துச் செய்தி

எல்லாம் வல்ல ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் பெருமான் திருவருள் துணையால் எம் பெருமானுக்குச் சித்திரத் தேர் கட்டி முடிந்து, வெள்ளோட்டம் நடைபெறவிருப்பதும், இதற்கான சிறப்பு மலர் வெளியீட இருப்பதும் வவுனியா வாழ் சைவப் பெரு மக்கள் எல்லோருக்கும் மட்டில்லா மகிழ்ச்சியாகும்.

வளர்ச்சியடைந்து வரும் வவுனியா நகரில் ஏனைய வளர்ச்சிகளுடன் பல இந்துக் கோவில்களின் வளர்ச்சியும் முன்னனியில் நிற்கின்றது. இந்த வகையில் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயமும் முன்னனியில் நின்று நாடித் தேடி ஓடி வரும் பக்தர்களுக்கு அருள் பாலித்து வருகின்றது.

இவ்வாலயத்தின் பரிபாலனசபையினரின் அயராத உழைப்பும், கண்ணியமான பரிபாலனமும் மேலும் இவ் ஆலயத்தை வளர்ச்சியடையச் செய்யும் என்பதில் நம்பிக்கையடைகிறேன். ஆலயத்தில் வரும் வருமானங்களில் ஒரு கணிசமான பகுதியையாவது சமூக சேவைக்கு ஒதுக்கி தற்காலத்தின் தேவையை உணர்ந்து சமூகப் பணியாற்றுவதன் மூலம் "எமது சைவ ஆலயங்கள் சமயப்பணி மட்டும் தான் செய்கின்றன" என்ற குற்றச்சாட்டில் இருந்து விடுபட பரிபாலன சபை முயற்சி எடுக்க வேண்டும் என விநயமாக வேண்டுகின்றேன்.

- நன்றி -

*" மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

*சுத்தானந்த இந்து இளைஞர்சங்கம்*
*வவுனியா*
*01-03-2001*

*அன்பன்*
*"மக்கள் சேவை மாமணி"*
*நா. சேனாதிராசா. சமா. நீதி*
*தலைவர்*

# சித்திரத்தேர் வெள்ளோட்டம்
# ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலயம்
# வவுனியா

தேர்த் திருவிழாவின் போது ஒரு அலங்கரிக்கப்பட்ட தேரினை கொடி, ஆலவட்டம், நாதஸ்வரம், பாடகர்கள் இத்தகைய ஆளணிகளுடன் வீதி வழியாக கோவிலைச் சுற்றி இழுத்து வருவோம்.

இந்த அலங்காரங்கள் ஆளணிகள் எல்லாம் தேர்த் திருவிழாவை அமர்க்களப்படுத்த அந்தத் தேரைச்சுற்றி பக்தர்கள் சூழ்ந்திருப்பார்கள். அவர்களுடைய கவனம் பெரும்பாலும் எங்கே இருக்கும்? அந்த அலங்காரத் தேரிலா? அந்தத் தேரின் முன்பு உள்ள தவில் நாதஸ்வரம், பாடகர்கள் போன்றவற்றிலா? எப்பொழுது பக்தர்கள் உண்மையான ஆனந்தத்தை அடைகின்றார்கள்? கையைக் கூப்பி அந்தத் தேரிலுள்ள தெய்வத்தை வணங்கி, கண்களை மூடி தங்கள் உள்ளிருக்கும் அந்த தெய்வீக சக்தியுடன் தொடர்பு கொள்ளும் போதுதான் உண்மையான ஆனந்தத்தை பக்தர்கள் பெறமுடியும்.

இந்த உடம்பு தான் தேர், ஆத்மாதான் அதன் உள்ளுறையும் தெய்வம்.

| | |
|---|---|
| உழைப்பதும் | செலவழிப்பதும் |
| சிரிப்பதும் | அழுவதும் |
| சாதனைகளும் | வேதனைகளும் |
| உவகைகளும் | உபாதைகளும் |
| இன்பமும் | துன்பமும் |

அந்தத் தேரின் முன்பு உள்ள ஆர்ப்பாட்டங்கள். உடம்புதான் தேர். புத்திதான் அந்தத் தேரைச் செலுத்துகின்றது. ஆசைககள் என்ற வீதியில் ஆர்ப்பரிக்கும் புலன்களுடன் இந்தத் தேர் வலம் வருகின்றது. ஆசைகளின் வேகம் தளர்ந்து அடங்கி உடம்பு என்ற இந்தத் தேரிலுள்ள ஆத்மாவுடன் தொடர்பு ஏற்படும் போதுதான் உண்மையான வாழ்வின் பலன் கிடைக்கின்றது. (பகவான் பாபா)

தேர்த் திருவிழா இந்த சத்தியத்தின் சத்தியத்தை எங்களுக்கு உணர்த்துகின்றது.

சிந்தாமணி விநாயகர் ஆலய சித்திரத் தேர் வெள்ளோட்டம் சிறப்புற இறைவனின் ஆசிகளை வேண்டுகின்றோம்.

*"சாந்தம்"*
*வவுனியா*
*24. 03. 2001*

*சி. இரகுநாதபிள்ளை*
*தலைவர்*
*பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலையம்*
*வவுனியா*

உ
சிவமயம்

# வவுனியா இந்துமாமன்றத்தின் வாழ்த்துக்கள்

*"நற்குஞ்சரக்கன்று நண்ணில் - கலைஞானம் கற்குஞ்சரக்கன்று காண்."*

வவுனியா நகர்ச்சூழலில் தனக்கென முதலாவது தேர் ஒன்றைத் தேடிக்கொண்ட விநாயகப் பெருமானுக்கு அன்பர்கள் அடியார்கள் புதியதோர் தேரை அமைத்து தத்தமது ஈடுபாட்டை வெளிப்படுத்தியுள்ளனர்.

துப்பார் திருமேனித் தும்பிக்கையான் பாதம் தப்பாமற் சார்வார் தமக்கு வாக்குண்டாம் நல்ல மனமுண்டாம் மாமலராள் நோக்குண்டாம் மேனி நுடங்காது என்று ஔவையார் கூறியது போல செல்வாக்கும் செல்வமும் நல்ல மனமும் நோயற்ற வாழ்வும் தரும் விநாயகரை போற்றி துதித்து இகபர சௌபாக்கியம் பெற்று உய்ய தேரில் இருந்து விநாயகப் பெருமான் உலாவரும் நாளில் எல்லோரும் நலம் பெற்றுவாழ அவனருளாலே அவன்தாள் வணங்கி வாழ்த்துவோம்.

*இறைபணிச் செம்மல்*
*வை. செ. தேவராசா*
*செயலாளர்.*

*சிவநெறிப்புலவர்*
*சீ. ஏ. இராமஸ்வாமி*
*தலைவர்*

## வவுனியா வெளிவட்ட வீதி ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் ஆலய தல வரலாற்றுச் சுருக்கமும்

# சித்திரத்தேர் வெள்ளோட்டமும் 29.04.2001

வீரமா நகரம் என்று புராண இதிகாசங்களில் சிறப்பித்துக் கூறப்படும் இலங்காபுரியின் இருதய ஸ்தானமாக விளங்குவது வவுனியா நகரம். அந்நகர மத்தியில் புகையிரத நிலையம் கமநலச் சேவை நிலையம், அரச விடுதிகள் சூழ்ந்திருக்கப்பெற்ற பாலை மரச்சோலையின் நாப்பண் வெளிவட்ட வீதியில் கோயில் கொண்டெழுந்தருளி, வழிபடும் அடியார்களின் இன்னல் நீக்கி, அருள்பாலிக்கிறார் ஸ்ரீ சிந்தாமணி விநாயகர் பெருமான்.

தற்பொழுது எழுந்தருளியிருக்கும் கோயில் வாசலுக்கு முன்புறமாக ஓங்கி வளர்ந்து நின்ற ஓர் பாலைமரத்தடியிலேயே எம்பெருமான் சிந்தாமணியான் ஆதி மூர்த்தியாக எழுந்தருளப்பெற்று தம்மை வந்து வழிபடும் அடியார்க்கும் வழிப்பயணம் செய்யும் போது தரிசித்துச் செல்லும் அடியார்க்கும் இன்னருள் பாலித்து வருவதை உணர்ந்த அடியார்கள் இறையருள் கூட்ட ஒரு சிறந்த ஆலயம் அமைக்க வேண்டுமென்பதை உணர்ந்தனர். இதன் பொருட்டாக அப்பொழுது வவுனியா கச்சேரியில் கடமையாற்றிய திரு.செ. கணேஷ் அவர்களின் தலைமையில் 11.02.1967 ம் ஆண்டு ஒரு பரிபாலனசபை அமையப்பெற்றது. இச்சபையின் செயற்பாட்டுத்திறமையால் 1968 ம் ஆண்டின் சுபவேளையொன்றில் தற்போதைய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டு வைபவம் இடம்பெற்றது. தொடர்ந்து 1970 ம் ஆண்டளவில் கர்ப்பக் கிரக மண்டபமும் அர்த்த மண்டபமும் பூர்த்தி செய்யப்பட்டு அதே ஆண்டு டிசம்பர் 4ம் திகதி கார்த்திகை மாத அவிட்ட நட்சத்திர சுப முகூர்த்தத்தில் சிவஸ்ரீ.விசுவநாதக்குருக்கள் அவர்களின் தலைமையில் எம்பெருமானின் குடமுழுக்கு விழா இடம் பெற்றது. அன்று நடைபெற்ற

கும்பாபிசேகத்தைத் தொடர்ந்து சிவஸ்ரீ. கனகசபாபதிக் குருக்களின் மகன் கந்தசாமிக் குருக்கள் குடும்பத்தினரால் காலை, மாலை ஆகிய இருகால நித்திய பூசைகள் நடாத்தப்பட்டு வந்தன. 1977 ம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட இனக் கலவரம் காரணமாகத் தடைப்பட்ட அவருடைய நித்திய பூசையைத் தொடர்ந்து சிவஸ்ரீ. தர்மலிங்கக் குருக்கள் அவர்கள் ஆலய நித்திய பூசையை பொறுப்பேற்று சிறப்பாக நடாத்தி வந்தார். தொடர்ந்து 1982 ம் ஆண்டு புதிய நிர்வாகசபைத் தெரிவு இடம் பெற்றபோது திரு.த. தியாகலிங்கம் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். புதிய நிர்வாக சபையின் ஊக்கமும் ஆக்கமும் சேர்ந்து எம்பெருமான் ஆலயத்திலே மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கூடியது. அதற்கேற்ப 22.04.1984ல் பாலஸ்தாபனம் செய்யப்பட்டுத் தொடர்ந்து பண்டிகை வேலை, பிளாட் போடுதல், வர்ணம் தீட்டுதல், மகாமண்டபம் அமைத்தல் ஆகிய திருப்பணி வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 17.03.1986 பங்குனித் திங்கள் றோகினி நட்சத்திர சுபமுகூர்த்த வேளையில் மட்டுவில் சோதிட சிகாமணி சிவஸ்ரீ. சிதம்பரநாதக் குருக்கள் அவர்களின் தலைமையில் எம்பெருமானின் குடமுழுக்கு விழாவாகிய மஹாகும்பாபிஷேகம் இனிதே நிறைவேறியது. தொடர்ந்து 23 நாட்கள் மண்டலாபிஷேகமும் சகஸ்ர நாம சங்காபிஷேகமும் நடைபெற்றன. 1986 ம் ஆண்டு நடைபெற்ற நிர்வாகசபைத் தெரிவின் போது திரு. V.S. தேவகுமாரன் அவர்களின் தலைமையில் புதிய நிர்வாகசபை தெரிவு செய்யப்பட்டது. புதிய நிர்வாகசபை அங்கத்தவர்களின் செயற்பாட்டினாலும் வழிபடும் அடியார்களின் ஒத்துழைப்பினாலும் எம்பெருமான் ஆலயத்திலே சித்திரை மாதப் பௌர்ணமி தினத்தைத் தீர்த்தோற்சவத் தினமாக 10 நாட்கள் கொண்ட மகோற்சவம் நடைபெறத் திருவருள் கூடியது. அதற்கேற்ற வகையில் கொடித்தம்பம், தேர், தேர்ச்சகடை, முதலியவற்றை அமைத்துக் கொடுக்க பல அடியார்களும் வர்த்தக நிறுவனங்களும் முன்வந்தன. இவற்றுள் தேர் அமைப்புக்கான மூல உபகரணங்களை சரசாலை நுணுவிலைச் சேர்ந்த அருள்மிகு சிதம்பர விநாயகர் ஆலயத்தின் அறங்காவலர் வழங்கியமை குறிப்பிடத்தக்கது. நவக்கிரக மண்டபத்தை திரு. முருகையா குடும்பத்தினர் பொறுப்பேற்று திருப்பணி வேலைகளை நிறைவு செய்தனர். வைரவப் பெருமான் திருப்பணி வேலைகளை அமரர் திரு. புலேந்திரன் அவர்களின் ஞாபகார்த்தமாக அவரது குடும்பத்தினர் நிறைவு செய்தனர். சண்டேஸ்வரர் எழுந்தருளி விக்கிரகத்தை திரு. உருத்திராபதி அவர்கள் அன்பளிப்புச் செய்தார். 1987ம் ஆண்டு பிரபவ வருடம் சித்திரைத் திங்கள் 22ம் நாள் (04.05.1987) சாவகச்சேரி சங்கத்தானையைச் சேர்ந்த பிரம்மஸ்ரீ. குமாரஸ்ரீஸ்காந்தக் குருக்கள் அவர்களின்

தலைமையில் எம்பெருமானுடைய மகோற்சவம் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமானது. தொடர்ந்து திருவிழாக்கள் சிறப்பாக நடைபெற்று ஒன்பதாம் நாள் எம்பெருமானின் சிறப்புமிக்க ரதோற்சவம் அடியார்கள் மனக்களிக்கும் வண்ணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. இதனைத் தரிசித்த ஒரு பக்தர்.

*"பார் எங்கும் புகழ்பரப்பி ஒளி விளங்க என்றும்*
*சீர்மல்கும் சிந்தாமணி விநாயகனை நாமின்று*
*பேர் சொல்லித் துதித்து நிற்க எம்பெருமான்*
*தேர் ஏறிவந்தாரே சித்திரைத் திங்கள் தனில்"*

என்று தன்மனங் குளிரப் பாடியுள்ளார் என்றால் எம்பெருமான் திருவருளை நினைக்கும் போது மெய்சிலிர்க்கின்றது. ரதோற்சவத்தைத் தொடர்ந்து சித்திரைப் பூரணை தினமாகிய மறுநாள் தீர்த்தோற்சவ வைபவமும் மகேஸ்வர பூசையும் வெகு சிறப்பாக நடைபெறுவதற்கு விநாயகப் பெருமான் திருவருள் பாலித்தருளினார். அடியார்களின் அயராத முயற்சியினாலும் நிர்வாக சபையினரின் ஊக்கத்தினாலும் இந்த மகோற்சவமானது 1987 ம் ஆண்டுமுதல் எதுவித தடையுமின்றி நடைபெற்று வருவது எம்பெருமான் திருவருளேயாகும். முதல் மகோற்சவத்தைத் தொடர்ந்து அடியார்களின் உதவி உற்சாக மேலீட்டினால் எஞ்சிய திருப்பணி வேலைகளும் காலத்துக்குக் காலம் நிறைவேற்றப்பட்டு ஆலயம் புதுப்பொலிவு பெற்றுள்ளமை போற்றத்தக்கது. குறிப்பாக வெளிமண்டபம், வசந்த மண்டபம், தீர்த்தக்கேணி ஆகிய மூன்றும் சிறப்புற்று விளங்கும் ஓர் ஆலயமாகத் திகழ்கிறது. 1990 ம் ஆண்டில் நாட்டில் இடம்பெற்ற கலவரங் காரணமாக எம்பெருமான் ஆலயத்திற்கும் பாரிய பாதிப்பு ஏற்பட்ட போதும் ஆண்டு தோறும் நடைபெறும் மகோற்சவமானது காலந்தவறாது நடைபெற்று வருகின்றதென்றால் எதுவும் அவன் திருவருளே. அதற்கேற்ற வகையில் அடியார்கள் மனமுவந்து நிதியுதவியையம் பொருள் உதவியையும் தாராளமாக வழங்கிக் கொண்டிருக்கிறார்கள்.

சிறப்பாக எம்பெருமான் ஆலயத்திலே வள்ளி தேவ சேனா சமேத சிவசுப்பிரமணியப் பெருமான் பரிவார மூர்த்தியாக எழுந்தருளியுள்ளார். இத்திருப்பணியை அமரர் டாக்ரர் சந்திரசேகரம் அவர்களின் ஞாபகார்த்தமாக அன்னாரது பிள்ளைகள் நிறைவு செய்து 1992 ம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெறத் திருவருள் கிடைக்கப்பெற்றது. அன்று முதல் ஸ்கந்தசஷ்டி விரத அடியார்களின் விரத அனுட்டானங்கட்கு ஏற்ற வகையாக அபிஷேகம், பூசை, கந்தபுராண பாராயணம், மகேஸ்வரபூசை ஆகிய சமயக் கிரியைகள் முறையாக நடைபெற்று வருவதும் எம்பெருமான் திருவருளே.

அடியார்களின் வேண்டுகோளுக்கிணங்க விநாயகப் பெருமானுக்கு சிறந்த சித்திரத்தேர் அமைப்பதற்கு ஆலய பரிபாலன சபையினர் எடுத்த முயற்சியின் பயனாக எம்பெருமானின் புதிய சித்திரத்தேர் அச்சேற்று வைபவம் 1999 ம் ஆண்டு தைப்பூச நன்னாளிலே இடம்பெற்று அவ்வருடம் ஆவணிமாத விநாயகர் சதுர்த்தித் தின நன்னாளில் மேற்படி தேரின் பவளக்கால் நாட்டு வைபவமும் இனிது நிறைவேற எம் பெருமான் திருவருள் கிடைக்கப்பெற்றது. ஸ்தபதி சிற்பக்கலாரத்தினம் கி.கலாமோகன் குழுவினரின் கைவண்ணத்தாலும். அடியார்கள் வாரி வழங்கிய திருப்பணி நிதியினாலும் எம்பெருமானுடைய சித்திரத்தேர் இனிதே நிறைவெய்தி 29.04.2001 அன்று சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா கோலாகலமாக நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. தொடர்ந்து இவ்வாண்டு நடைபெறும் மகோற்சவத்தில் எம்பெருமான் புதிய சித்திரத்தேரில் பவனிவந்து அடியார்கட்கு அருள்பாலிப்பார் என்பதை பெருமகிழ்ச்சியோடு அறியத்தருவதுடன் இவையெல்லாம் எவ்வித இடையூறுமின்றி நிறைவேற எம்பெருமான் திருவருளைப் பிரார்த்திக்கின்றோம்.

*"வாழ்க சீர் அடியார் எல்லாம்"*

*ஆலயபரிபாலன சபையினர்.*



# இதயத்தேரிலிருந்து

*சிற்பக்கலைச் செல்வன்*
*சிற்பக்கலாமணி*
*சிற்பகலாரத்தினம் விஷ்வப்பிரம்மஸ்ரீ*
*கி. கலாமோகன்*

ஒரு கலைஞனின் வளர்ச்சியில் பல உந்து சக்திகள் இருக்கின்றன. அந்தவகையிலே எனது முதற் தெய்வங்களாகிய மாதா, பிதாவை குறிப்பிட வேண்டும். எனது தந்தையார் கிருஷ்ணர் அவர்களும் ஒரு சிற்பக்கலைஞர். அதனாலேயே என்னையும் ஒரு சிறந்த குருவிடம் கலையை முறைப்படி பயில வேண்டும் என்ற எண்ணக் கருக்கொண்டு எனது குரு நாதரும் மாமனாருமாகிய அமரர் கலாகேசரி தம்பித்துரையிடம் ஒப்படைத்தார்கள். அந்த மாபெரும் கலை மேதை பல கலைஞர்களை உருவாக்கியவர். அந்தக் கலைத் தீபத்தின் ஒரு பொறியாக என்னையும் வளர்த்து இன்று உங்கள் முன் நானும் ஒரு சிறு கலைஞன் என்று கூறுமளவிற்கு கொண்டு வந்துள்ளார் என்றால் மிகையல்ல.

ஆகம, சிற்ப,நூல் அறிவும் உயிரோட்டமுள்ள சிற்பங்களை லலித நயத்துடன் அமைக்கும் ஆற்றலும் உடையவர். இப்படியானவர்களையே ஸ்தபதி என்று ஆகம, சிற்ப மரபுகள் கூறுகின்றன. கடந்த மூன்று தசாப்தங்களாக ஈழத்துத் தேர்க்கலையில் முக்கிய ஸ்தபதியாக விளங்கியவர் ''கலாகேசரி'' தம்பித்துரை என்பது தனிச்சிறப்பு . அப்படிப்பட்ட கலைமேதை குருவாக எனக்குக் கிடைத்தது நான் செய்த பெரும் பேறாகும். அதனாலேயே எல்லாம் வல்ல வீநாயகப் பெருமானின் அருளால் அவர்கள் எல்லோருடைய ஆசியும் கிடைக்க வேண்டுமென்று இவர்களின் பாதார விந்தங்களில் சிரம் தாழ்த்தி வணங்குகின்றேன்.

கலைகளை, கலைஞர்களை வளர்த்ததில் தென்மராட்சிக்கும் சிறப்பு உண்டு. ஆலயத் தேர்கள், வாகனங்கள் அமைப்பதில் புதியதோர் எழுச்சியை ஏற்படுத்தியவர்

மட்டுவில் வி. ஆறுமுகம் அவர்கள். அவர்தம் மைந்தன் தம்பித்துரையே எனது குருநாதர். எனவே கலை ஊற்று பிறப்பெடுத்தது மட்டுவில் என்றால் வியப்பல்ல.

முதன் முதலாக எனது கன்னித் தேரை உருளவிட உதவியவர் சரசாலையைச் சேர்ந்த அமரர் சிவநெறிச்செம்மல் நமசிவாயம் அவர்களே. அவர் மாணாக்கனாகிய திரு. க.அருந்தவராசா அவர்களே என்னை வெளி மாவட்டத்திற்கு அறிமுகப்படுத்தி பெருமை சேர்த்துள்ளார். எனவே அவர்களுக்கும் எனது முதற்கண் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அவரின் கூற்றை ஏற்று இத் தெய்வீகத் திருப்பணிசெய்ய என்னை இங்கு அழைத்த ஆலய நிர்வாக சபையினர், திருப்பணிச் சபையினருக்கும் அன்பு நன்றி உரித்தாகுக.

அத்துடன் எனது சக கலைஞர்களைப் பற்றி முக்கியமாகக் கூற வேண்டும் எனது சகோதரராகிய கி.கெங்கநாதசிவம் அவர்கள் ஆலோசனைகளை வழங்கி தானும் ஒரு பங்காளியாக நின்று உதவி உள்ளார். மேலும் அவர் பணி தொடர வேண்டும் என்று வேண்டிக் கொள்கின்றேன். அடுத்த படியாக இப் பணியை ஆரம்பம் தொட்டு இறுதிவரை உதவியவர்களில் க. சேகர் அவர்களையும் குறிப்பிட வேண்டும். சிற்பக்கலையை பயின்றுவரும் மாணவர் அவர். மற்றும் ரமேஸ், ராசன், மாப்பிள்ளை போன்றோரின் உதவிகளும் குறிப்பிடத்தக்கன.

மேலும் இத்திருப்பணிசிறக்க வர்ணவேலையால் தனது திறமையை வெளிப்படுத்திய வளர்ந்து வரும் இளம் கலைஞர் அஜந்தன் அவர்களுக்கும் அவர்தம் குழுவினருக்கும் எல்லா வழிகளாலும் உதவிய மற்றைய கலைஞர்களுக்கும் அவர்கள் பணி வளர வேண்டும் என்று வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

*நன்றி*

உ

# வெளிவட்ட வீதி விநாயகருக்கு முகபத்திர வட்டத்தேர் (வேசரம்)

*சிற்பக்கலைச் செல்வன், சிற்பகலாமணி, சிற்பகலாரத்தினம்*
*விஷ்வப்பிரம்மஸ்ரீ*
*கி. கலாமோகன்.*

கலைகளை வளர்ப்பதில் ஆலயங்கள் முக்கிய பங்கை வகிக்கின்றன. அந்த வகையிலே வவுனியா சிந்தாமணிப் பிள்ளையாருக்கும் பெரும் பங்கு உண்டு. ஒரு கலைஞனின் வளர்ச்சிப் பாதையில் முக்கிய பங்கை வகிப்பதில் ஆலயம் முதன்மை பெறுகின்றது என்றால் மிகையல்ல.

இந்தியாவிலே சிற்ப வல்லுனர்கள் சிற்ப சாஸ்திரப்படி கட்டிடக் கலையை நாகரம், வேசரம், திராவிடம் என மூன்று பாணிகளாக வகுத்தார்கள். அதன் அடிப்படையாகவே கோவிலில் சித்திரத் தேர்களையும் வேறு கலைப் படைப்புக்களையும் உருவாக்கினார்கள்.

நாகரம் என்பது சதுர வடிவமுடையதாகவும் வேசரம் வட்ட வடிவமுடையதாகவும், திராவிடம் எண்கோண வடிவமுடையதாகவும் உருப்பெற்றது. பிறிதோர் கோட்பாட்டின்படி இரண்டாம் பகுதியாக ஆந்திரம் என்னும் அறுகோண வடிவமுடைய தேர்களையும் வடிவமைத்தார்கள். அந்த வகையிலே இன்று இங்கு கம்பீரமாகக் காட்சி அளிக்கும் சித்திரத் தேரானது விநாயகப் பெருமானுக்கே உரிய வேசர மரபுத்தேராகும் இது மற்றப்பாணிகளைவிட முற்றிலும் மாறுபட்டது. வேசர வடிவில் முகபத்திரங்கள் மீட்கப்பட்டுள்ளதால் தனிச் சிறப்புப்பெற்றுள்ளது. தேரினுடைய மூலாதாரமாகிய அச்சுக்கள், சக்கரங்கள் மருதமரத்தினால் ஆக்கப் பட்டுள்ளன. ஆதாரமாகிய பூதப்பார்களை சற்பங்கள் தாங்குகின்றன. மற்றும் சிறப்பம்சமாக ஆதி கூர்மம் பூமாதேவி, ஆதிநாகம் என்பன தேரைத் தாங்கி நிற்கும் பாணியில்

அமையப்பெற்றுள்ளன. உபபீடகபோதகம் வேசரவடிவில் அட்ட கறணைக் கூடுகள் மூலம் முகபத்திரம் மீட்கப்பட்டு அதில் கஜங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

சிற்றூர் மட்டம் நாகர அமைப்பில் தெய்வீகச் சிற்பங்கள் தெய்வீகலீலைகள் புடைப்பு உருவங்களாக உருப்பெற்றுள்ளன. பேரூர் மட்டம் திராவிட மரபில் அமைக்கப்பட்டுள்ளன. இவை இரண்டிலும் யாழிகள் குதிரைகள் மகரங்கள் அன்னப்பட்சிகள் என்பன அணிவகுத்து காட்சி அளிக்கின்றன.

மேலண்டமாகிய விமானம் வேசர வடிவம் பெற்றுள்ளது. மேல் பண்டிகை எழுதக வடிவில் இருந்து முற்றிலும் மாறுபட்டு திரணை வடிவம் பெற்றுள்ளது. 24 மாடங்கள் அமைக்கப்பெற்று முகபத்திரங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. பிரமவிஷ்ணு, உருத்திர பாகங்கள் அடக்கப்பட்டு விநாயகப் பெருமானுக்கே உரிய தாமரை மொட்டினை ஒத்த அமைப்பில் அமைக்கப்பட்டுள்ளதன் மூலம் நாம் கற்றுக் கொண்ட சிறிய கலைப் பயிற்சியில் ஒரு வளர்ச்சியை வவுனியா சிந்தாமணிப் பிள்ளையாரின் அருளால் பெற்றதன் மூலம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

